1972 ஆகஸ்ட் 21]

Intensive Cultivation of Staple Cotton.

* 159 Q.—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the Government for the intensive cultivation of staple cotton at present ?

நெட்டிழை பருத்தி தீவிர சாகுபடி திட்டம்

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நெட்டிழைப் பருத்தி தீவிர சாகுபடித் திட்டத்திற்கு தற்போது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Scheme on the basis of economic status.

* 160 Q.—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state whether there is any proposal with the Government for formulating a scheme for the benefit of persons classified on the basis of economic status as in the case of persons classified as Backward Classes on the basis of castes ?

பொருளாதார அடிப்படையில் பலன் தரும் திட்டங்கள்

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

சமுதாயத்தில் சாதி வாரியாகப் பிற்பட்டவர்கள் என்றுள்ளவர்களுக்குத் தரப்படுவது போன்ற பலன் தரும் திட்டத்தினைப் பொருளாதார ஏற்றத் தாழ்வு அடிப்படையில் பிரிக்கப்பட்டு பலன்கள் தருகிற திட்டம் பற்றி அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

@ 399-400-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.